### ஜனநாயகக் கொள்கைகளுக்கு முரணானது! FCRA தொடர்பான

# புதிய திருத்தங்கள் - கட்டுப்பாடுகளை உடனடியாகத் திரும்பப் பெறுவீர்!

## பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்ற த.மு.மு.க. கூட்டத்தில் ஒன்றிய அரசுக்கு வலியுறுத்தல்!

தென்காசி, ஜூலை 21-

தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகத்தின் தலைமைச் செயற்குழு 15.7.2026 அன்று தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் தலைவர் பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது.




இச்செயற்குழுவில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சமூகநீதி, பாசிச எதிர்ப்பு, மாநில உரிமைகள் பாதுகாப்பு, இருமொழிக் கொள்கை, உள்ளிட்ட கருத்தியல்களில் தி.மு.க. அரசு போட்டுத் தந்த தடத்தில் த.வெ.க. அரசும் தடம் மாறாமல் பயணித்து தமிழ்நாட்டின் நலன் காக்க வேண்டும் என்று இச்செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் போட்டியிட்ட வேட்பாளர்களுக்கு குறிப்பாக நாகப்பட்டினம் மற்றும் மணப்பாறை தொகுதியில் போட்டியிட்ட மனிதநேய மக்கள் கட்சியின் வேட்பாளர்களுக்கு ஆதரவாக தேர்தல் பணிகளை செய்த தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் தொண்டர்களுக்கும் வாக்களித்த மக்களுக்கும், த.மு.மு.க.வின் அனைத்து நிலை நிர்வாகிகளுக்கும் இச்செயற்குழு நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

**முஸ்லிம்களுக்கான இடஒதுக்கீடு!**

இந்திய அரசியலமைப்பின் அடிப்படைக் கூறுகளான மதச்சார்பின்மை, சமத்துவம், மதச்சுதந்திரம் மற்றும் சிறுபான்மையினரின் அரசியலமைப்புச் சட்ட உரிமைகளைப் பாதுகாப்பது உயரிய கடமையாகும்.

இஸ்லாத்தை தமது வாழ்வியல் நெறியாக ஏற்றுக் கொள்ளும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டு உரிமை தொடர்பான அரசாணை எண் 31ஐ ரத்து செய்த சென்னை உயர்நீதி மன்றத்தின் நீதியரசர்கள் ஜி.ஆர்.சுவாமிநாதன் - பாலாஜி அமர்வின் தீர்ப்பு, ஏற்கனவே அதே அரசாணையின் செல்லுபடித்தன்மையை உறுதி செய்திருந்த நீதிபதிகள் எம்.எஸ். ரமேஷ் மற்றும் சக்திவேல் அமர்வின் தீர்ப்புக்கு முரணாக அமைந்துள்ளதால், இது நீதித்துறை ஒழுங்குமுறை (Judicial Discipline) மற்றும் முன்னுதாரணத் தீர்ப்புகளைப் பின்பற்றும் நீதி முறை மரபுகள் குறித்து கடுமையான கேள்விகளை எழுப்புகிறது.

எனவே, அரசாணை எண் 31 தொடர்பான முரண்பட்ட தீர்ப்புகளை தீர்க்கும் வகையில், வரும் சட்டமன்றக் கூட்டத் தொடரில் இஸ்லாத்தை தழுவிய பிற்படுத்தப்பட்ட முஸ்லிம்களின் சமூக மற்றும் கல்வி ரீதியான உரிமைகளை உறுதிப்படுத்தும் வகையில், 2007ஆம் ஆண்டு இயற்றப்பட்ட தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட முஸ்லிம்கள் இடஒதுக்கீட்டு சட்டத்தில் தேவையான சட்டத்திருத்தங்களை தமிழக அரசு நிறைவேற்ற வேண்டுமென இச்செயற்குழு கோருகிறது.

**வக்ப் திருத்தச் சட்டம்!**

ஒன்றிய பா.ஜ.க. அரசு நிறைவேற்றியுள்ள வக்ப் திருத்தச் சட்டத்தை தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்த மாட்டோம் என்று சென்ற தி.மு.க. ஆட்சியில் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன் அடிப்படையில் தமிழ்நாடு வக்ப் வாரியத்தில் முஸ்லிமல்லாத உறுப்பினர்கள் யாரும் நியமிக்கப்படவில்லை. இதே நிலைப்பாட்டை புதிய ஆட்சியும் கடைப்பிடிக்க வேண்டும் தமிழ்நாடு வக்ப் வாரியத்திற்கு முழு தலைமை செயல் அலுவலர் நியமிக்கப்பட வேண்டும்

25 ஆண்டுகளுக்கும் மேலாக தங்களின் தண்டனை காலத்தை நிறைவு செய்த பின்னரும் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள முஸ்லிம் வாழ்நாள் சிறைவாசிகளை உடனடியாக விடுதலை செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

**காவிரி டெல்டா மாவட்டங்கள்!**

தமிழகத்தின் நெற்களஞ்சியமாக விளங்கும் காவிரி டெல்டா மாவட்டங்களில் ஆயிரக்கணக்கான விவசாயிகள் பெரும் இழப்பை சந்தித்துள்ளனர்.

எனவே காவிரி டெல்டா மாவட்டங்களை உடனடியாக வறட்சி பாதித்த பகுதிகளாக அறிவிக்க வேண்டும். குறுவை சாகுபடி செய்ய முடியாமல் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் ஏக்கருக்கு ரூ.15,000 வீதம் வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும். பிரதமரின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், "விதைப்பு அல்லது நடவு மேற்கொள்ள இயலாமை தொடர்பான இடர்" பிரிவின் அடிப்படையில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உடனடியாக இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழ்நாட்டின் காவிரி கடைமடை மாவட்டங்களை பாலைவனமாக்கும் நாசகர திட்டமான மேகதாது அணை திட்டத்தை கர்நாடகா அரசு உடனடியாக கைவிட வேண்டும் என இச்செயற்குழு வலியுறுத்துகிறது.

காவிரி நீர்ப் பங்கீட்டில் தமிழ்நாட்டின் நியாயமான உரிமையைப் பெற்றுத்தருவதில் ஒன்றிய பா.ஜ.க. அரசு கடமை தவறி ஓரவஞ்சனை செய்யக்கூடாது என எச்சரிக்கிறோம்.

**தேர்தலில் வாக்குச்சீட்டு முறை!**

பா.ஜ.க.வின் கைப்பாவையாக மாறி நாளுக்கு நாள் நம்பகத்தன்மையை இழந்து வரும் இந்தியத் தேர்தல் ஆணையத்தை செயற்குழு தனது கடுமையான அதிருப்தியை தெரிவித்துக் கண்டிக்கிறது.

இனிவரும் காலங்களில் தேர்தல் ஆணையத்தின் நம்பகத்தன்மயை பாதுகாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**கலைஞர் கனவு இல்லம்!**

கலைஞர் கனவு இல்லம் வீடு கட்டும் திட்டத்தில் வீடு இல்லாத ஏழைகளுக்கு அரசாணை வழங்கப்பட்டு தற்போது பயனாளிகள் 80% வீடு கட்டியும் அவர்களுக்கான மானியத் தொகை 3,50,000 லட்சத்தில் இன்னும் ஒரு தவணை தொகைக் கூட வழங்கப்படவில்லை. இதனால் பயனாளிகள் மிகவும் சிரமப்பட்டு வீட்டு வேலையை முடிக்காமல் உள்ளனர்.

தமிழ்நாடு அரசு உடனடியாக இத்திட்டத்தின் பயனாளிகளுக்கு உரிய தொகையை விடுவிக்க வேண்டுமென இச்செயற்குழு வலியுறுத்துகிறது.

மக்களின் நலனை கருத்தில் கொண்டு, வீட்டு மின்சார நுகர்வோருக்கு மாதந்தோறும் மின் கட்டணத்தை செலுத்தும் முறையை சட்டப்பூர்வமாக அறிமுகப்படுத்த தமிழ்நாடு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்

உடனடியாக தென்காசியில் அரசு மகளிர் கல்லூரி தொடங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குற்றாலம் சீசன் நேரங்களிலும், தினசரிப் போக்குவரத்திற்கும் பிரதானமாக விளங்கும் இலஞ்சி சாலையில் கடந்த 3 ஆண்டுகளுக்கு மேலாக பாலம் கட்டும் பணி ஆமை வேகத்தில் நடைபெற்று வருகிறது. இது பொதுமக்களுக்கும், சுற்றுலாப் பயணிகளுக்கும் பெரும் சிரமத்தை ஏற்படுத்துகிறது.

இப்பணி விரைவாக முடிக்கப்பட போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தென்காசி மாவட்டத்தில் கட்டி முடிக்கப்பட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை விரைவாக திறக்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

**அந்நிய நிதி ஒழுங்குமுறைச் சட்டம் (FCRA)**

ஒன்றிய அரசு கொண்டு வந்துள்ள அந்நிய நிதி ஒழுங்குமுறைச் சட்டம் (FCRA) தொடர்பான சமீபத்திய திருத்தங்கள் மற்றும் விதிமுறைகள், நாட்டில் சமூக நீதி, கல்வி, சுகாதாரம், பேரிடர் நிவாரணம், மனித உரிமைகள் மற்றும் சிறுபான்மை நலப் பணிகளில் ஈடுபட்டு வரும் தன்னார்வ அமைப்புகள் மற்றும் சமூக நிறுவனங்களின் செயல்பாடுகளை கடுமையாகப் பாதிக்கும் வகையில் அமைந்துள்ளதை ஆழ்ந்த கவலையுடன் பதிவு செய்கிறது.

குறிப்பாக, FCRA பதிவு புதுப்பிக்கப்படாத நிலையிலும் அல்லது ரத்து செய்யப்பட்ட நிலையிலும், அந்த அமைப்புகளின் சொத்துகள் மற்றும் நிதிகளை அரசால் நியமிக்கப்படும் அதிகார அமைப்பின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு செல்லும் ஏற்பாடு, இயற்கை நீதி மற்றும் ஜனநாயகக் கொள்கைகளுக்கு முரணானதாகும். மேலும், புதிய கட்டுப்பாடுகள் சமூக சேவை நிறுவனங்களின் சுயாதீன செயல்பாடுகளை முடக்கும் அபாயத்தையும் உருவாக்குகின்றன.

எனவே, இந்த செயற்குழு FCRA தொடர்பான சமீபத்திய திருத்தங்கள் மற்றும் புதிய கட்டுப்பாடுகள் உடனடியாகத் திரும்பப் பெறப்பட வேண்டுமென ஒன்றிய அரசை கோருகின்றது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### விளாத்திகுளம் எம்.எல்.ஏ. ஜி.வி.மார்க்கண்டேயன் கைது!

# த.வெ.க. அரசின் அராஜகத்தை வன்மையாகக் கண்டிக்கிறோம்!

## மாவட்டச் செயலாளர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் எம்.எல்.ஏ. அறிக்கை!

தூத்துக்குடி, ஜூலை 21-

தூத்துக்குடி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் அனிதா ராதாகிருஷ்ணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினரும் தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினருமான ஜி.வி. மார்க்கண்டேயன் நேற்று அதிகாலையில் த.வெ.க. அரசின் காவல்துறையால் அராஜகமான முறையில் ஜனநாயக விரோதமாக கைது செய்யப்பட்டுள்ளார். இச்செயல் வன்மையான கண்டனத்துக்குரியது.

விளாத்திகுளம் தொகுதி மக்களிடம் மிகுந்த செல்வாக்கைப் பெற்று மக்கள் ஊழியராக சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறார். அனைத்து தரப்பு பொதுமக்களிடம் நல்ல உறவை பராமரித்து வரும் மார்க்கண்டேயன் மூன்றாவது முறையாக எம்.எல்.ஏ.வாக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

நமது நாட்டின் அரசியல் சட்டம் வழங்கியுள்ள கருத்துச் சுதந்திரம் பேச்சுரிமை தனிமனித உரிமை என எல்லாவற்றையும் அராஜகமான முறையில் மீறுகிறது த.வெ.க. அரசு. விமர்சனங்களை எதிர்கொள்ள திராணியற்ற அரசு கைது செய்வதன் மூலம் தி.மு.க.வினரை அடக்கிவிடலாம் என்று பகல் கனவு காணுகிறது. எந்த வகையிலும் அச்சுறுத்தி பணிய வைக்கலாம்



என்ற எண்ணம் ஒருபோதும் நிறைவேறாது.

ஸ்ரீவைகுண்டம் த.வெ.க. சட்டமன்ற உறுப்பினர் மீது பாலியல் வன்புணர்ச்சி செய்தவர்களை காப்பாற்றுவதாக சொந்த கட்சியைச் சார்ந்த பெண் புகார் கொடுத்தும் எதிர்க் கட்சித் தலைவர் சட்டமன்றத்தில் இவ்விபரத்தை எழுப்பியும் அந்த எம்.எல்.ஏ. மீது எந்த நடவடிக்கையும் எடுக்காத அரசு தி.மு.க. உறுப்பினர்களை அராஜகமான முறையில் கைது செய்கிறது. மாநிலம் முழுவதும் கருத்துச் சுதந்திரத்தை ஒடுக்க கைது விசாரணை என்ற பெயரில் துன்புறுத்தல் தொடர் கதையாக இருக்கிறது. சர்வாதிகார முறையில் செயல்படும் த.வெ.க. அரசுக்கு மக்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள். கைது செய்யப்பட்ட எம்.எல்.ஏ. மார்க்கண்டேயனை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். எங்கள் மக்கள் பணி தொடர்ந்து நடைபெறும்.

இவ்வாறு அனிதா ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

# மலையடிப்பட்டி அகழாய்வில் வெண்கலத் தகடுகள் கண்டெடுப்பு!

சங்கரன்கோவில், ஜூலை 21-

தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் அருகே உள்ள மலையடிப்பட்டி யில் தொல்லியல் துறையினர் மேற்கொண்டு வரும் அகழ்வாராய்ச்சியில், கீழடிக்கு இணையான பழை மையான கட்டட அமைப்புள்ள கிணறு, முதுமக்கள் தாழிகள் கண்டெடுக்கப்பட்டன.

தமிழகத்தில் 8 இடங்களில் அகழாய்வுப் பணிகளை மேற்கொள்ள மத்திய அரசு கடந்த மார்ச் மாதம் அனுமதியளித்தது. அவற்றில் ஒன்றான காரிச்சாத்தான் ஊராட்சிக்குட்பட்ட மலையடிப்பட்டி, வைப் பாறு ஆற்றங்கரையில் 3 மாதங்களாக அகழாய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் பல்வேறு பழைமையான பொருள்கள் கண்டறியப்பட்டுள்ளன.

இங்கு 16 குழிகள், 2 இடுகாட்டுக் குழிகள் தோண்டப்பட்டு ஆய்வு மேற்கொண்டதில், கற்களாலான படிக்கட்டுகள் கொண்ட சதுர வடிவ செங்கல் கட்டுமானக்கிணறு கண்டறியப்பட்டுள்ளது.

செங்கற்கள் 40 செ.மீ. நீளமும், 20 செ.மீ. அகலமும், 7 செ.மீ. கனமும் கொண்டவையாக இருப்பதாகவும், இவை கீழடி, அழகன்குளம், பூம்புகாரில் கண்டெடுக்கப்பட்ட செங்கற்களின் அளவில் உள்ளதால் 2,500 ஆண்டுகள் பழைமையான சங்க கால நாகரித்தைச் சேர்ந்தவை யாக இருக்கலாம் எனவும் தொல்லியல் துறையினர் கூறுகின்றனர்.

மேலும், கிணற்றின் உள்பகுதியில் நீர்மட்டம் அதிகமாக இருந்ததற்கான தட யங்கள் இருப்பதால், கோடை காலங்களில் மக்களுக்கான நீராதாரமாக இருந்திருக்கக் கூடும்.

இதுவரை 2 மீட்டர் ஆழம் வரை மட்டுமே ஆய்வு செய்யப்பட்டுள்ள தால், தொடர் ஆய்வுக்குப் பிறகே கிணற்றின் முழு ஆழம் தெரிய வரும் என்றும் தொல்லியல் துறை யினர் கூறுகின்றனர்.

தமிழகத்தில் நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சியில் முதல் முறை கிணறு கண்டறியப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. யாக படிக்கட்டுகளுடன் கூடிய பண்டைய மக்களின் வாழ்விடப் பகுதியும், இடுகாட்டுப் பகுதியும் ஒரே இடத்தில் இருந்ததை இந்த ஆய்வின் மூலம் கண்டறிய முடிகிறது. அகழாய்வில் மனித எலும்புகள் உள்ள முதுமக்கள் தாழிகள், கருப்பு, சிவப்பு மண் பாண்டங்கள், கீறல் குறியீடுகள், வெண்கலப் பொருள்கள், சுடுமண் பொருள்கள், நுண் கற்காலக் கருவிகள், கண்ணாடி மணிகள், இரும்புக் கழிவுகள், உயர் தர வெண்கலத்தகடுத் துண்டுகள், சுடுமண் விளையாட்டுப் பொம்மைகள் ஆகியவை கண்டறியப்பட்டுள்ளன.

ஹீமடைட் இரும்புத் துகள்கள் கிடைத்திருப்பதால், இது இரும்பு உற்பத்தி செய்த இடமாக இருந்தி ருக்கக் கூடும் எனவும், 50 ஏக்கரில் மக்கள் வாழ்ந்ததற்கான பகுதிகள் மற்றும் பண்டைய நகர நாகரிகம் இங்கு இருந்ததற்கான பொருள்கள் கிடைத்துள்ளதாகவும் கூறப்படுகி றது.

ஏற்கெனவே, 1930ஆம் ஆண்டு கரிவலம்வந்தநல்லூர் பகுதியில் 6 ரோமானிய தங்க நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதால், இங்கு கிடைத்துள்ள பொருள்கள் கி.மு. 5 அல்லது 6ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாக இருக்கலாம் எனவும் கூறப்படுகிறது.

இங்கு கண்டறியப்பட்டுள்ள தொல்லியல் சான்றுகள் மூலம் நுண் கற்காலத்திலிருந்து இரும்புக் காலம் மற்றும் வரலாற்றுத்தொடக்கக்காலம் வரை மக்கள் வாழ்ந்திருக்கலாம், கண்டெடுக்கப்பட்ட மாதிரி கள் கரிமப் பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்டு, அதன் பிறகே உறுதியான முடிவுகள் தெரிய வரும்.



தாம்பரம் மாநகராட்சிக்கு உட்பட்ட மண்டலம் 4, வார்டு 32 யில் கடப்பேரி அரசு ஆதிதிராவிடர் நடுநிலைப் பள்ளியில் கட்டப்பட்டு வரும் கூடுதல் கட்டிடத்தை தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி கமலக்கண்ணன் ஆய்வு மேற்கொண்டார். உடன் பள்ளி தலைமை ஆசிரியர், ஒப்பந்ததாரர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**கட்பீஸ் அ. பழனி**

**ஜூலை 21 (2019)**



**இளமைக் காலம் முதலே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.**

**வடசென்னை மாவட்டம், சார்பு மன்ற நிர்வாகி, 10வது வட்ட பகுதி பிரதிநிதி, இராயபுரம் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர், 1996 முதல் 2016 வரை தொடர்ந்து இராயபுரம் பகுதிச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**2006ல் சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்கள் நன்மதிப்பை பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**


# அறிவாலயத்தின் ஆயுதக் கிடங்கு!

**1980**ஆம் ஆண்டு ஜூலை மாதம் இருபதாம் தேதி மதுரை ஜான்சி ராணி பூங்காவில் தி.மு.க. இளைஞர் அணியின் துவக்க விழாவை முத்தமிழறிஞர் கலைஞர் தொடக்கி வைத்தார். இந்திய அரசியல் வரலாற்றிலேயே ஒரு அரசியல் கட்சி அதன்; இளைஞர் அணியை அன்றுதான் முதன் முதலில் தோற்றுவித்தது.

1831ம் ஆண்டு ஜூலை மாதத்தில் ஒரு நாள் பிரான்ஸ் நாட்டில் இளைஞர்கள் சிலர் ஓர் அமைப்பை உருவாக்கினார்கள். மிகச் சிறந்த சிந்தனையாளர், எழுத்தாளர் ஜோசப் மாஜினியின் தலைமையில் அவரது மாணவன் ஜோசஃப் கரிபால்டி உள்ளிட்ட இளைஞர்கள் கூடி புரட்சி அமைப்பை உருவாக்கினார்கள். அமைப்புக் கூட்டம் நடந்த அறையில் 'இளைய இத்தாலி " (Young Italy) என்ற பதாகை மின்னியது.

அதுபோல சமத்துவ, சகோதரத்துவ, ஜனநாயக, சமூக நீதி காக்கும் கழகத்தின் இளைஞர் அணி தொடங்கப்பட்ட போது மேடையில் 'தி.மு.க. இளைஞர் அணி' என்ற பதாகை மின்னியது.

தன்னுடைய 14ம் வயதில் கோபாலபுரத்தில்



**வழக்கறிஞர் அறந்தாங்கி வெங்கடேசன்**

1967ம் ஆண்டு 'இளைஞர் தி.மு.க." வைத் தொடங்கி இளம் வயதினரை கழகத்தின்பால் ஈர்த்த நமது கழகத் தலைவர் 1980ல் இளைஞர் அணிக்குத் தலைமைப் பொறுப்பேற்றார். நம் தாய் நாட்டு இளைஞர்களே! வாருங்கள் நம் கொடியைப் பட்டொளி வீசிப் பறக்கச் செய்து நம் இனப்படையை வழிநடத்த வாருங்கள்! என்று அன்றைக்கு கரிபால்டி அழைத்தார்.

இன்பத் தமிழ்நாட்டு இளைஞர்களை இயக்கத்தில் சேர நம் தலைவர் அழைத்தார்.

ஆரம்பத்தில் கழகத் தலைவர், திருச்சி சிவா, பரிதி இளம்வழுதி, தாரை மணியன். வாலாஜா அசேன் ஆகிய ஐந்து பேர் கொண்ட அமைப்புக் குழு உருவாக்கப்பட்டது. பின்னர் முகவை பஞ்சவர்ணம், நெல்லை ஜெயம் ஜீலியஸ் ஆகியோரோடு ஏழு பேர் கொண்ட குழுவாக இயங்கியது. அந்தக் குழு மாவட்டம் தோறும் சென்று இளைஞர் அணிக்கு உணர்வுள்ள இளைஞர் பட்டாளத்தை தேர்வு செய்தது.

தமிழக இளைஞர்களைக் கவர்ந்திழுத்து மாபெரும் கொள்கைக் கூட்டமாக இளைஞர் அணியினை கழகத் தலைவர் உருவாக்கினார்.

2019 ஜூலை மாதம் 4ஆம் தேதி உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இளைஞர் அணிச் செயலாளராகப் பொறுப்பேற்றுக் கொண்டதிலிருந்து இளைஞர் அணியின் எழுச்சி மிகுந்த இரண்டாவது அத்தியாயம் தொடங்கியது. இளைய சமுதாயத்தின் எழுச்சி முழக்கத்தில் கழகக் கொடி கம்பீரமாகப் பறக்கத் தொடங்கியது.

**இனம் காக்கும் கழகத்தின் துணை ராணுவம்;;**

**அண்ணா அறிவாலயத்தின் ஆயுதக் கிடங்கு!**
**தி.மு.க. இளைஞர் அணி வெல்லட்டும்!**